

# எம்.பி.நிர்மல்




எப்போதும் பரபரப்பாகக் காணப்படும் கோயம்பேடு பேருந்து நிலையத்தைத் தாண்டிச் செல்லும் போது, அதன் நுழைவாயிலில் இரண்டு பெரிய, நிரம்பி வழியும் குப்பைத் தொட்டிகள் என் கண்ணில் பட்டது. அந்த துர்நாற்றத்தையோ அல்லது அங்கு பறக்கும் ஈக்களையோ கண்டுக்காது பாராமுகமாக பேருந்து நிலையத்தின் உள்ளும் வெளியேயும் மக்கள் சென்று கொண்டிருந்தனர். சில சென்னைவாசிகள் நாற்றம் தாங்காமல் மூக்கை மூடிக் கொண்டு சென்றனர்.
திரு. நிர்மல் அவர்களுடன் நடந்த ஒரு மணி நேர உரையாடலுக்குப் பின், இந்த குப்பைத் தொட்டி எனக்கு வேறு மாதிரி தெரிந்தது. சுத்தம், சுகாதாரம், இயற்கை, காலநிலை மாறுதல்கள், பல்லுயிர் அனைத்தும் பிணைந்துள்ளது என்பதை உணர்ந்தேன். ஆயிரத்தில் எத்தனைப் பேருக்கு இவரைப் பற்றித் தெரியும் என்று தெரியவில்லை. 30 வருடத்துக்கு முன் சுத்தமான சுற்றுப்புறம், சுத்தமான சென்னை வேண்டும் என்று கனவு கண்டதோடு, மக்கள் சக்தி மீது நம்பிக்கை கொண்டு தொடர்ந்து போராடி, தன் கனவை நிஜமாக்கினார். இங்கு நான் குறிப்பிடுவது திரு. நிர்மல் அவர்களையும், அவரின் நிறுவனமான 'எக்ஸ்னோரா'வைப் பற்றியும் தான். தமிழக அரசிடமிருந்து எந்தவித நிதிஉதவியும் இன்றி, விளம்பரம் ஏதும் செய்யாமலும், சமூக ஊடகங்களில் எந்த காணொளியும் போடாமலும், வெறும் வாய்வார்த்தை மூலமும், தன்னார்வத்திலும் அவர் செய்திருக்கும் சாதனை மிகவும் சுவாரஸ்யமானதொரு ஆய்வாகும்.

**இளமை காலம்**

நிர்மல் ஒரு கூட்டுக் குடும்ப சூழ்நிலையில் வளர்ந்து, தன் பள்ளி மற்றும் கல்லூரி படிப்பைப் முடித்தார்.பெற்றோர்களிடமிருந்து பெரிதும் எதிர்பார்ப்பு ஏதும் இல்லாமல், பள்ளியிலும் சாதாரண மாணவனாகவே இருந்தார். வர்த்தகத்தில் பட்டப்படிப்பு முடித்து தன் 20வது வயதில் 'இந்திய வெளிநாட்டு வங்கி'யில் வேலையில் சேர்ந்தார். இந்த வங்கியிலும் அவர் எந்த விதமான தனித்திறமையையும் காட்டவில்லை. 1960-களில் வங்கியில் வேலைப் பார்த்த சாதாரண எழுத்தர் போல் தான் இருந்தார்.

**மாற்றத்திற்கான உந்துதல்**

நிர்மல் இரண்டு நிகழ்வுகள் தன்னை மாற்றியது என்றும், அந்த நிகழ்வுகள் தன் மாற்றத்திற்கான தீப்பொறிகள் என்றும் கூறுகிறார்.

நல்ல வளமான குடும்பத்திலிருந்து வந்த நிர்மலும் அவரின் குடும்பத்தாரும் சூழ்நிலை காரணமாக தாழ்ந்த பகுதிக்கு குடியேற வேண்டியதாயிற்று. இது ஒரு பெரிய சறுக்கல் என்றாலும், அவரின் குடும்பம் அதைப் பொருட்படுத்தாது எப்போதும் போல் சாதாரணமாக வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் வீட்டுக்கு வந்த அவரின் அத்தை அந்த பகுதியில் நடக்கும் சட்ட விரோத செயல்களையும், விபச்சார புரோக்கர்கள் செய்யும் கலாட்டவையும் பார்த்து 'ஒரு நல்ல இடத்தில் குடியேறக் கூடாதா?' என்று கேட்டார். இந்த கேள்வி நிர்மலை யோசிக்க வைத்தது. 'நல்ல இடத்தில் குடியேற முடியாது. ஆனால் இந்த இடத்தை நல்ல இடமாக என்னால் மாற்ற முடியும்' என்று பதிலளித்தார்.

அவரின் வங்கி ஆரம்பக் காலத்தில், அவரின் முதலாளி, 'உனக்கு எல்லாம் யார் வேலை கொடுத்தாங்க?' என்று கேட்டது அவருக்கான இன்னொரு தீப்பொறி என்கிறார். வாடிக்கையாளர்களுடனான பொது உறவில் சிறந்து விளங்கியதால் 'இந்தியாவின் சிறந்த வங்கி மேலாளர்'க்கான 'இந்திரா காந்தி நினைவு விருது'ம், அப்போது நிதி அமைச்சராக இருந்த மறைந்த திரு. வி.பி. சிங்கையால் 'சிறந்த வங்கியாளர்' விருதும் கிடைக்கப் பெற்றார்.

**எக்ஸ்னோராவிற்கான விதை**

வெளிநாட்டு வேலை முடித்துத் திரும்பி வந்த நிர்மல் நந்தனம் கிளைக்கு இடப்பட்டார். தெருக் குழந்தைகளுக்கு வங்கி கடன், வண்டி வரியை வங்கி முகப்பு மூலம் கட்டும் வசதி என கேள்விப்படாத பல புதுமைகளைப் புகுத்தினார். சில எண்ணங்களை நடைமுறைப் படுத்தினால், எவ்வளவு சக்தி வாய்ந்ததாக மாறும் என்பதை உணர்ந்தார். அந்த வங்கி காலங்கள் அவருக்கு, கூட இருப்பவர்களைத் தூண்டி எண்ணங்களை எப்படி நடைமுறைப் படுத்துவது என்ற நுட்பத்தை அவர் கற்றுக்கொள்ள மிகவும் உதவியது.

அப்போதும் சரி, இப்போதும் சரி, நகரத்தாராகிய நாம், நம் நகரத்தைப் பற்றியோ, நகர வாழ்க்கையின் தரத்தைப் பற்றியோ கவலைப்பட்டதேயில்லை. இந்த சுத்தமும்-சுகாதாரமும், மாநில-மாநகராட்சியின் பொறுப்பு என்று நினைப்பதால், வாழ்க்கைத் தரத்தை நம்மால் உயர்த்த முடியும் என்பதை மறந்தோம் என்று நம்பினார். இந்த எண்ண ஓட்டங்களே, 'எக்ஸ்னோரா' உருவாக விதையாக அமைந்தது. எல்லா சவால்களிலும் ஒரு வாய்ப்பு இருக்கும் என்று நம்பிய நிர்மல், 'எக்ஸ்னோரா'வை நடத்துவது கட்டாயத் தேவை என்றும் நம்பினார்.

இப்படித் தான் 1988 - ல் 'எக்ஸ்னோரா' உருவாகியது. 'எக்ஸ்னோரா' என்பது - 'சிறந்த எண்ணங்களுக்கு குரல் கொடுத்து, புதுமை அணுகுமுறைகளை முயற்சி செய்து, புரட்சியான மாறுதலைகளைக் கொண்டு வருவது' ஆகும்.

**எக்ஸ்னோரா பயணம்**

'மக்கள் மூலமே மக்கள் பிரச்னையைத் தீர்க்க வேண்டும்' என்ற கருத்தே நிர்மலையும் எக்ஸ்னோராவையும் வழி நடத்தியது. 1989-ல், அடையார் காமராஜ் அவென்யூவில் எக்ஸ்னோரா தொடங்கப்பட்டது. சுத்தப்படுத்த ஆள் இல்லாமல் குவிந்து கிடக்கும் குப்பைக்கு பழகிப் போன குடியிருப்பாளர்கள், நித்தமும் காலை நடமாடும் குப்பைத் தொட்டி வந்து குப்பையை அப்புறப்படுத்தி சென்றதை மிகவும் வரவேற்றனர். ஒவ்வொரு எக்ஸ்னோரா பிரிவும் ஒரு தலைவர், ஒரு பெண் பிரதிநிதி, ஒரு மூத்த குடிமகனைக் கொண்டு ஒரு தெரு அல்லது 2-3 தெருவை சுத்தப்படுத்தும் பணியை மேற்கொண்டனர்.

எல்லாம் எதிர்பார்த்தப் படியே நடந்தது. குடியிருப்பாளர்கள் தம் தம் தெருக்களுக்கு தாமே பொறுப்பேற்று, மாநகராட்சி அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு குப்பைகளை அப்புறப்படுத்தினர். அக்கம் பக்கத்தில் வசிக்கும் சிறந்த மனிதர்கள் பிரதிநிதி பொறுப்பேற்க முன் வந்தனர். ஆரம்பித்த 5 வருடங்களிலேயே எக்ஸ்னோரா, நகரத்தில் 3000 பிரிவுகளாக வளர்ந்து, சென்னையில் உற்பத்தியான குப்பையில் 30% ஐ சேகரித்தது. பெற்றோர்கள் எடுக்கும் எந்த முடிவிலும் குழந்தைகளுக்கு நிறைய பங்கு இருக்கு என்பதை உணர்ந்த நிர்மல், அவர்களை சுத்தம் பற்றி பிரச்சாரம் செய்ய பயன்படுத்திக் கொண்டார். குழந்தைகள் அவரை 'குப்பை மாமா' என்று அழைத்தனர்.

ஒரு அமைதி புரட்சியாக முழு சென்னையையும் தனக்குள் கொண்டு வந்தது எக்ஸ்னோரா. இந்த இயக்கம் குடியிருப்பவர்களின் தன்னார்வம், சேவை எண்ணம், பங்கு கொள்வதில் பெருமை இவற்றை அடிப்படையாகக் கொண்டே இயங்கியது. சுத்தமான தெரு, சுகாதாரமான







சூழ்நிலையோடு, அக்கம் பக்கத்தாரோடு நல்லதொரு உறவுமுறை, பிரச்னைகளை தாமே தீர்த்துக் கொள்ளும் மனப்பான்மை ஆகிய நகரத்தாரிடம் பார்க்க முடியாத குனாதிசயங்களும் குடியிருப்பவர்களிடையே வளர்ந்தது.



**கழிவு மேலாண்மையும், சூழலும்**

'கழிவு கழிவே அல்ல அதை வீணாக்கும் வரை' என்பதை நிர்மல் நம்பினார். கழிவைப் பணமாக்கும் முறைக்கு முன்னோடியாக இருந்து, கழிவு மேலாண்மையை ஊக்குவித்து, நிலையான பண வருவாய்க்கும் இது ஒரு நல்ல வாய்ப்பு என்பதை தெளிவுப்படுத்தினார். ஒரு சாதாரண 'கலப்பு உரம்' நுட்பத்தை சென்னை மக்களுக்கு விளக்கி, வீட்டுத் தோட்டத்துக்கு அறிமுகப்படுத்தி இதில் பெரிய வெற்றியும் பெற்றார்.

1997-லேயே, எக்ஸ்னோரா- மூலம்பிரித்தல், மீள்சுழற்சி, கழிவு மேலாண்மை போன்ற புதுமைகளை அறிமுகப்படுத்தியது. மூலம் பிரித்தலையும், கரிம, பச்சை கழிவுகளை மீள்சுழற்சி செய்வதையும் தொடர்ந்து செய்து வந்தாலே, சென்னையின் மொத்த குப்பையில் 50% ஐ குறைக்க முடியும் என்று நம்பினார். 'மாநகராட்சி திடகழிவு விதிகள் 2000' என்பதை கொண்டு வர உச்சநீதிமன்றத்தில் பொது நல வழக்கு பதிவு செய்ததில், எக்ஸ்னோராவின் பங்கு மிகப் பெரியதாகும். இந்த விதிகள் மாநகராட்சி அதிகாரிகள் கழிவு மேலாண்மைக்கு கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை விளக்குகிறது. நாளடைவில் எக்ஸ்னோரா, கழிவு மேலாண்மை, மழை நீர் சேகரிப்பு, உப்பு நீர் சுத்திகரிப்பு, சுற்றுபுற சுகாதார பிரச்னைகளுக்கான தீர்வு ஆகியவற்றுக்காக முழுமையாக வேலை செய்யும் ஒரு அமைப்பாக உருவாகியது.

சென்னை மாநாகராட்சி இயற்கையைப் பேணும் ஒரு பெரிய தனியார் இயக்கியை நியமித்தவுடன், எக்ஸ்னோராவின் 'மூலம்பிரித்தல்' செயல்முறையில் கடும் இறக்கம் ஏற்பட்டது. எக்ஸ்னோரா அந்த தனியார் இயக்கியோடு கூட்டுசேர்ந்து வேலை பண்ண முடியும் என்று நம்பியது. ஆனால் இரு தரப்பினரின் கருத்துக்கள் வேறுப்பட்டு இருந்ததால் ஒத்து வரவில்லை. நிர்மல் எக்ஸ்னோரா மிகவும் தேவை என்றும், அதனால் குடியிருப்போர் நிச்சயம் பயனடைவர் என்றும் உறுதியாக நம்புவதால், அதை மறுபடியும் உயிர்பிக்க வேண்டும் என்று ஆர்வத்துடன் இருக்கிறார்.

நகரத்தின் சுற்றுப் புறத்தைக் காக்க அவர் அறிமுகப்படுத்திய புரட்சி புதுமை செயல்முறைகள், அதன் மூலம் ஒரு நிலையான வருவாய்க்கான வாய்ப்பு உருவாக்கியது, இதற்காக பலதரப்பட்ட மக்களை எந்தவித ஜாதி, மதபேதமின்றி ஒன்றாக சேர்த்தது, தன்னார்வ தொண்டின் சக்தியை விவரித்தது - இவை அனைத்தையும் செயல்பட வைத்ததில் நிர்மல் முன்னோடியாக திகழ்கிறார்,

சென்னையில் சுத்தமான சுற்றுசூழல், தரமான சுகாதாரம் - இதற்காக போராடும் நிர்மலின் பங்களிப்பு அபாரமான சாதனை ஆகும். நிச்சயம் இவர் ஒரு சென்னையின் சாதனையாளர் தான்.